OUR EPIC TRANSFORMATION

எமது ‘எபிக்’ (EPIC) மாற்றங்கள்

அன்புள்ள லேக்றிஜ் ஆரோக்கிய நிலைய Lakeridge Health நோயாளரே/குடும்ப அங்கத்தினரே,

**உங்களுக்கு மேன்மையான சேவைகளை வழங்கவென எமது ‘எபிக்’ னை மாற்றியமைக்கின்றோம்!**

டிசம்பர் December 3, 2021, மத்திய கிழக்கு ஒன்ராறியோவிலுள்ள ஆறு பங்காளித்துவ வைத்தியசாலை நிறுவனங்களுடன் சேர்ந்து லேக்றிஜ் ஆரோக்கியநிலையம் Lakeridge Health ‘எபிக்’இனை – ஒரு நவீன, கணினி சார் தொகுதியை அறிமுகப்படுத்தும். இது ஒரு இலத்திரனியல் ஆரோக்கியப் பதிவுப் பத்திரத்தினை ஒவ்வொரு நோயாளிக்கும் வழங்கும்.

இந்தப் புதிய, பகிரப்படும் தொகுதி ஆரம்பமானது எமது சரித்திரத்தில் ஒரு மைல்கல்லாகி Lakeridge Health, in Durham Region டுர்ாம் பிரதேச லேக்றிஜ் ஆரோக்கிய நிலையம் மற்றும் மத்திய கிழக்கு பிரதேசம் எங்கனும் பராமரிப்பை நாம் வழங்குவதில் பெரிய முன்னேற்றத்தினை பல சந்ததியினருக்கும் ஏற்படுத்தும். ‘எபிக்’இன் பல நன்மைகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- சிகிச்சை முடிவுகளை எடுக்க உதவும் பரிசோதனை முடிவுகள், மருந்துகள் பற்றிய தகவல்கள், மற்றும் முக்கியமான ஆரோக்கிய தகவல்கள் உள்ளடக்கிய யாவற்றையும் சரியான நேரத்தில் பெறுதலை எளிதாக்குகின்றது.
- நோயாளியின் பாதுகாப்பு சிறப்பியல்புகள் உட்பட நெடுக்குக் கோடுகள் மூலம் அடையாளப்படுத்தி உறுதிப்படுத்தும் வடிவங்கள் நோயாளியின் கட்டிலருகிலேயே வைக்கும் முன்னேற்றங்கள்
- மேலும் நிலைத்திருக்கக்கூடிய ஆரோக்கிய தொகுதிக்குப் பங்களிக்கும் விதமான மீண்டும் மீண்டும் பிரதிபடுத்தலைக் குறைத்ததும் மிக செயற்திறன்மிக்கதுமான முறைமைகள்

மேலும், இந்த ‘எபிக்’கினது தொடக்கி வைப்பானது ஒரு புதிய **MyChart Central East Ontario** நோயாளர் இணைப்பை உள்ளடக்கி உங்கள் மருத்துவ அறிக்கைகள் மற்றும் தனிப்பட்ட ஆரோக்கிய தகவலை அடைதல்எளிதாக்குகின்றது. **MyChart Central East Ontario** வில் நீங்கள் பதிவு செய்தல்பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ள டிசம்பர் 3 முதல் lakeridgehealth.on.ca/mychart சென்று பார்வையிடுங்கள்.

One System. Best Health.

Lakeridge Health

இந்த வேகமான பாதுகாப்பான மேன்மையான பராமரிப்பு வழங்கும் முறைமைக்கு நாம் மாறிக்கொண்டிருக்கும்போது காத்திருப்பு நேரங்கள் வழமையானதைவிட அதிகமாக இருப்பதையும் சில செயன்முறைகள் வித்தியாசமாக நடத்தப்படுவதனையும் நீங்கள் அவதானிக்கக்கூடும்.

நாம் எந்த சேவைக் குழப்பங்களையும் மிகக்குறைவாக்குவதற்கு மிகவும் பிரயத்தனம் செய்கின்றோம். இந்த மாற்றியமைத்தலின் போது பராமரிப்பு மற்றும் ஆதரவினை எமது நோயாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் மிகச்சிறப்பான முறையில் தொடர்ந்து வழங்குவதனை உறுதிப்படுத்த விரும்புகின்றோம். எமது குழுவினர் உங்களுக்கு மேன்மையான சேவை மற்றும் உங்கள் ஆரோக்கியப் பராமரிப்புத் தேவைகளை வழங்க இந்தப் புதிய தொகுதியுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் போது உங்கள் பொறுமையையும் புரிந்துணர்வையும் மிகவும் பாராட்டுக்கின்றோம்.

உங்களுக்கு ஏதும் கேள்விகள் இருப்பின் உங்கள் ஆரோக்கியப் பராமரிப்புக் குழு அங்கத்தினர் ஒருவருடன் தயவுசெய்து பேசுங்கள்.